# எண்ணற்ற விளக்குகள், எல்லையில்லா அழகில் மிளிரும் ஏரித் தோட்டம்

வண்ண ஒளி உமிழும் அலங்கார விளக்குகள், பல வடிவங்களிலான ‘லேண்டர்ன்’ எனப்படும் கூண்டு விளக்குகள் ஆகியவற்றால் களை கட்டியிருக்கிறது ஜூரோங் ஏரித் தோட்டம்.

இந்த ஆண்டின் இலையுதிர்கா லக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் விதமாக ‘லைட்ஸ் பை த லேக்’ விழாவை நேற்று முன்தினம் ஒளியூட்டு நிகழ்ச்சியின் மூலம் அதிபர் ஹலிமா யாக்கோப் தொடங்கி வைத்தார்.

அடுத்த மாதம் 11ஆம் தேதி வரை நடைபெறவிருக்கும் இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். பாரம்பரிய சீன இசைக்கருவிகளோடு மேற்கத்திய இசைக்கருவிகளும் வாசிக்கப்படும் நிகழ்ச்சிகள் வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவில் நடைபெறும்.

‘ஆக்டிவ் எஸ்ஜி’, ‘பேஷன் வேவ்’ ஆகியவற்றுடன் இணைந்து பொது மக்களுக்காகப் பல்வேறு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்தி சாயும் நேரத்தில் வழிகாட்டியுடன் கூடிய நடைப் பயணம், கூண்டு விளக்கு விடுகதைகள் போன்றவற்றில் அவர்கள் பங்கேற்கலாம். அதிபர் சவால் நிகழ்ச்சியுடன் இணைந்து நடைபெறும் இவ்வாண்டு விழாவில் பல்வேறு கூண்டு விளக்குகளும் தொட்டியில் வளர்க்கப்படும் ‘போன்சாய்’ மரங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் திரட்டப்படும் நிதி அதிபர் சவால் அறநிதிக்கு வழங்கப்படும்.

அன்றாடம் இரவு 7 மணியிலிருந்து 11 மணி வரை ஒரு கருப்பொருளைச் சார்ந்து வடிவமைக்கப்பட்டிருக்கும் பிரம்மாண்டமான கூண்டு விளக்குகள் ஒளியூட்டப்பட்டிருக்கும். காண்பவர் கண்ணைக் கவரும் இத்தகைய 12 விளக்குகள் அடுத்த மாதம் 18ஆம் தேதி வரை ஜூரோங் ஏரித் தோட்டத்தை அலங்கரிக்கும்.

‘ஏ ஸ்மார்ட் மீடியா’, மக்கள் கழகம், தென்மேற்கு சமூக மேம்பாட்டு மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து ‘லைட்ஸ் பை த லேக்’ விழாவிற்கு தேசியப் பூங்காக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கு தேசியக் கலை மன்றமும் எஸ்பிஎச் மீடியாவின் சீன ஊடகக் குழுமமும் ஆதரவு வழங்குகின்றன.





‘லைட்ஸ் பை த லேக்’ விழாவில் கூண்டு விளக்குகள் விற்பனை மூலம் கிடைக்கும் தொகை அதிபர் சவால் அறநிதிக்கு வழங்கப்படும். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

# அர்ப்பணிப்பை வலியுறுத்தும் அன்பான ஆண் தாதி ரெங்கநாதன்

மோனலிசா

செய்யும் தொழிலுக்கும் பாலினத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று உத்வேகத்துடன் கூறுகிறார் ஆண் தாதியான கி. ரெங்கநாதன் (படம்). நேர்மையும் அர்ப்பணிப்பு உணர்வும் வேட்கையும் இருந்தால் எந்தத் தொழிலிலும் யாராலும் சாதிக்க இயலும் என்பது இவரது உறுதியான நம்பிக்கை.

தொற்றுநோய்களுக்கான தேசிய சிகிச்சை நிலையத்தில் பணிபுரியும் இவர் தாதியருக்கான சிறப்புத் தகுதி விருதைப் பெற்றுள்ளார்.

சிறுவயது முதலே புத்தகம் வாசிக்கும் பழக்கம் உள்ள ரெங்கநாதன், ‘எய்ட்ஸ்’ நோய் பற்றிய ஒரு புத்தகம் தன்னை மிகவும் பாதித்ததாகக் கூறினார். ‘எச்ஐவி’ தொற்றிய நோயாளிகள்மீது காட்டப்படும் பாகுபாடு முறையற்றது என்று உணர்ந்ததால், தாமே தாதியாகி அவர்களுக்கு உதவ வேண்டும் என்று முடிவெடுத்தார்.

தற்போது இவர் ‘எச்ஐவி’ தொற்றால் பாதிக்கப்பட்டோரிடையே தகுந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் ‘எச்ஐவி’ நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் சக தாதியருக்கு எளிமையான சிகிச்சை முறைகளைக் கற்றுக்கொடுப்பதிலும் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்.

‘ஏன்டிரெட்ரோவைரல் தெரபி’ எனும் சிகிச்சைமுறை ‘எச்ஐவி’ தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு அதிகம் பயனுள்ளதாக இருக்கிறது என்றும் இம்முறையில் உள்ள சிகிச்சைகளை சரியாகப் பின்பற்றினால் ‘எச்ஐவி’ நோயாளிகளும் எவ்வித சிரமமும் இல்லாமல் சராசரி வாழ்க்கையை மேற்கொள்ள இயலும் என்றும் தாதி ரெங்கநாதன் கூறினார்.

நிலையத்தில் ‘எச்ஐவி’ நோயாளிகளுக்கான தாதியர் பராமரிப்பு முறைகளை மேம்படுத்தும் நோக்கில், விளம்பரத் தட்டிகள் மூலம் எளிய முறையில் தாதியருக்குக் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதே போன்று ‘எச்ஐவி’ தொற்று பற்றிய பல்வேறு தகவல்களையும் சேகரித்து வருகிறார்.

குறிப்பாக, புதிதாக ‘எய்ட்ஸ்’ நோய் கண்டறியப்படுவோருக்கு ஆரம்பகால சிகிச்சைமுறைகள் பற்றிய தகவல்களை ஒன்றுதிரட்டி கற்றல் வளங்களையும் உருவாக்கி வருகிறார்.

தொடர்ந்து 10வது ஆண்டாகத் தாதிமைத் தொழிலில் ஈடுபட்டுள்ள இவர், “2016ஆம் ஆண்டில் ஒரு 80 வயது மூதாட்டி என் ‘வார்டில்’ இருந்தார். நான் அவரை மிகுந்த கனிவுடனும் அக்கறையுடனும் கவனித்த முறையினால் ஈர்க்கப்பட்ட அவர் என்னை அவருடைய பேரன் என்றே அழைத்தார்.

“உடல்நிலை மோசமான நிலையில் வாழ்நாளின் கடைசித் தருணங்களை என்னுடனே கழித்தார். புன்னகைத்த நிலையில் அவர் உயிர் என் கண்முன்னே பிரிந்தது. சில நாள்கள் கழித்து அவருடைய மகள் எனக்கு நன்றி கூறி அனுப்பிய கடிதம் வாழ்வின் அர்த்தத்தை எனக்கு உணர்த்தியது,” என்று நெகிழ்வுடன் கூறினார்.



‘எச்ஐவி’ சிகிச்சைமுறையில் அக்கறை செலுத்தும் தாதி கி. ரெங்கநாதன்.
**படம்: தொற்றுநோய்களுக்கான தேசிய நிலையம்**

கொவிட்-19 கிருமிப்பரவல் காலத்தில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு ஊழியர்களுக்கு சிகிச்சை அளித்தது ரெங்கநாதனுக்கு மறக்க முடியாத அனுபவம். அவர்களுடன் தமிழில் உரையாடி மருத்துவர்களிடம் அதனை மொழிபெயர்த்துக் கூறியதால் மேம்பட்ட சிகிச்சை சாத்தியமானது என்றார்.

அந்தச் சூழலில் பெரும்பாலான நோயாளிகள் மிகுந்த கவலையிலும் மன அழுத்தத்திலும் இருந்ததால் அவர்களைப் பொறுமையுடனும் நிதானத்துடனும் கையாளுவது மிகுந்த சவாலாக இருந்தது என்று குறிப்பிட்டார்.

தாதிமைத் தொழிலில் கூடுதல் நேரம் பணியாற்றவேண்டி ய சூழல் இருந்தாலும், மனத்திற்கும் உடலுக்கும் போதிய ஓய்வு அளிக்க, நேரத்தை முறையாகத் திட்டமிட்டு வகுப்பதாகக் கூறிய இவர், நோயாளிகளுக்கு மேம்பட்ட சிகிச்சை முறைகளுடன் அன்பு, அக்கறையோடு கூடிய பராமரிப்பையும் வழங்குவதையே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டுள்ளார்.

## கம்ப ராமாயணச் சிறப்புப் பட்டிமன்றம்

இராமாவதார நோக்கம் நிறைவேறப் பெரிதும் துணை நின்றது அன்பா? வீரமா? என்ற தலைப்பில் நாளை மாலை 6.30 மணிக்கு பிஜிபி அரங்கில் கம்பராமாயணச் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற இருக்கிறது.

ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோவில், இந்து அறக்கட்டளை வாரியம், தமிழ்ப் பட்டிமன்றக் கலைக்கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்தப் பட்டிமன்றத்தில் தமிழகத்தின் புகழ் பெற்ற ஆன்மிக, பட்டிமன்றப் பேச்சாளர் கி சிவக்குமார் நடுவராகக் கலந்துகொள்கிறார்.

‘இராமாவதார நோக்கம் நிறைவேறப் பெரிதும் துணைநின்றது வீரமே!’ என முனைவர் சரோஜினி செல்லக்கிருஷ்ணன் தலைமையில் திருமதி ராஜி ஸ்ரீநிவாசனும் சிங்கப்பூர் சீனப் பெண்கள் பள்ளி மாணவி விஷ்ருதா நந்தகுமாரும் பேசவிருக்கிறார்கள்.

‘அன்பே துணைநின்றது’ என முனைவர் ந. செல்லக்கிருஷ்ணன் தலைமையில் திரு உமாஷங்கர் நாராயணனும் விக்டோரியா பள்ளி மாணவர் ரவிகுமார் சிவ்ரிஷியும் பேசவிருக்கிறார்கள்.

தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகம், லிட்டில் இந்தியா வர்த்தகர்கள், மரபுடைமைச் சங்கத்தின் ஆதரவோடு நடக்கும் இப்பட்டிமன்றத்தைக் காண அனுமதி இலவசம்.

## வந்துவிட்டது ‘ஹைட்ரஜன்’ ரயில்



கரியமில வாயுவை வெளியேற்றாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த ‘ஹைட்ரஜன்’ ரயில் (படம்) வர்த்தக ரீதியான சேவையை வழங்கத் தொடங்கிவிட்டது. அண்மையில் ஜெர்மனி இதனை அறிமுகம் செய்தது.

ஹைட்ரஜன், ஆக்சிஜன் ஆகிய வாயுக்களைக்கொண்டு தயாரிக்கப்படும் மின்சாரத்தில் இயங்கும் இந்த ரயில் நீராவியையும் தண்ணீரையும்தான் வெளியிடும். கூடுதலாகத் தயாரிக்கப்படும் மின்சாரத்தைச் சேமிக்க மின்கலனும் பொருத்தப்பட்டுள்ளது. ஒருமுறை எரிபொருள் கலனை நிரப்பினால் ஏறத்தாழ 1,000 கிலோமீட்டர் வரை இதில் பயணம் செய்யலாம்.

### நாணயச் செலாவணி

| | |
|---|---|
| இந்திய ரூ. 100க்கு | 1.76 |
| மலேசிய ரிங்கிட் 1க்கு | 0.31 |
| ஆபரணத் தங்கம் 1 கிராமுக்கு | 76.80 |

## நெஸ்லே நிறுவனத்தின் புதிய வீகன் கிட்கேட் சாக்லெட்

நெஸ்லே நிறுவனம் ‘வீகன்’ எனப்படும் விலங்குகளில் இருந்து பெறப்படும் உணவுவகைகளைத் தவிர்ப்போருக்கான புதிய சாக்லெட்டை அறிமுகப்படுத்தி உள்ளது.

‘கிட்கேட் வி’ என்பது அதன் பெயர். முழுவதும் தாவரப் பொருள்களால் தயாரிக்கப்படும் இந்த சாக்லெட் நேற்று பிரிட்டன் உள்ளிட்ட 15 நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில் பாலுக்குப் பதில் அரிசியில் இருந்து தயாரிக்கப்படும் பால்போன்ற பொருள் பயன்படுத்தப்படுவதாக புளூம்பெர்க் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டு உள்ளது.

தாவரப் பொருளால் ஆன இதனைத் தயாரிக்க நெஸ்லே நிறுவனத்துக்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தன. நிறுவனம் நடத்திய கருத்தாய்வில் 40 விழுக்காட்டு வாடிக்கையாளர்கள் தாவரப் பொருளால் ஆன இத்தகைய சாக்லெட்டுகளையே இனி உண்ண விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த நெஸ்லே நிறுவனத்தின் இந்தப் புதிய முயற்சி வர்த்தக ரீதியாக வெற்றி பெறுமா என்பதை உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்கள் தரும் ஆதரவுதான் முடிவு செய்யும் என்பதை ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர்.




படம்: நெஸ்லே

## ‘இடர்களைத் தவிர்க்க நினையாமல் திடமாக எதிர்கொள்ளுங்கள்’

பொன்மணி உதயகுமார்

‘சிங்கப்பூர் பிசினஸ் ரிவியூ’ சஞ்சிகையின் 40 வயதிற்குக் குறைவான சிறந்த 10 சொத்து முகவர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர் டாலஸ் ஹசான் (படம்).

தன் இளம் வயதில் சொந்த வீட்டிலிருந்து வாடகை வீட்டிற்கு மாறிய கசப்பான அனுபவம் இவருக்கு உண்டு. கூட்டுத் தொழிலில் இவரது தந்தை எதிர்கொண்ட நிதிச் சிக்கல்களே அதற்குக் காரணம்.

தேசிய சேவை செய்து கொண்டிருந்த டாலசால் அப்போது குடும்பத்திற்குப் பெரிதும் கைகொடுக்க இயலவில்லை. ஆனால், தேசிய சேவைக்குப் பிறகு சொத்துச் சந்தை தொடர்பான பயிற்சியை முடித்து பகுதிநேர சொத்து முகவராகப் பணிபுரியத் தொடங்கினார்.

அப்போது ‘ரிச் டெட், புவர் டெட்’ எனும் நூலைப் படிக்க நேர்ந்தது. சொத்துச் சந்தையைப் புதிய கோணங்களில் அணுகி தன் வெற்றிக்குப் பாதை வகுத்துத் தந்தது அந்த நூல்தான் என்கிறார் டாலஸ்.

குடும்பத்தின் நான்கு பிள்ளைகளில் மூத்தவரான டாலஸ் தன் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் சொந்தமாக வீடு வாங்க வேண்டும் என்று ஊக்குவித்ததுடன் உதவியும் செய்திருக்கிறார். இளம் வயதில் எதிர்கொண்ட சம்பவங்களின் தாக்கம்தான் தனக்கு உந்துதலாக இருந்ததாக இவர் கூறுகிறார்.

கடந்த இருபது ஆண்டுகளாக சொத்துச் சந்தைத் துறையில் வேலைசெய்யும் டாலஸ், தற்போது ‘ஆரஞ்ச்டீ & டை’ நிறுவனத்தில் மூத்த மாவட்ட இயக்குனராகப் பணியாற்றுகிறார். இவர் 60 முகவர்களைக் கொண்ட குழுவின் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்.

வீடு வாங்குவோருக்குப் பொறுப்பான முறையில் அறிவுரை கூறும்படி தன் குழுவினரிடம் இவர் வலியுறுத்துகிறார். காரணம், வீடு வாங்கும் பரிவர்த்தனையோடு தங்களது வேலை முடிந்து விடுவதாக இவர் கருதவில்லை. வீடு வாங்குவோரின் குடும்பங்களையும் அவர்களது நிதிச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு செயல்படுவதும் சொத்து முகவர்களின் பொறுப்பு என்றே இவர் கருதுகிறார்.

சென்ற ஆண்டு 400 குடும்பங்கள் புதிய வீட்டில் குடியேற இவரது தலைமையிலான குழு உதவியது.

வாடிக்கையாளர்கள் பலர் நண்பர்களாகப் பழகுவதாகக் கூறிய டாலஸ், பயனாளர்களின் கூடுதல் எதிர்பார்ப்புகளை நேரமின்மையால் தொடர்ந்து நிறைவேற்ற முடிவதில்லை என்றார்.



இந்தத் துறையில் தன்னைத் தனித்துக் காட்டுவது, விடா முயற்சியும் எதையும் செய்யக் கூடும் என்ற நம்பிக்கையுமே என்று குறிப்பிட்டார்.

“ஒருவர் அடிபட்டுத்தான் வாழ்க்கையில் ஊக்கம் பெற வேண்டும் என்பதில்லை,” என்று சொல்லும் டாலஸ், “இடர்களைத் தவிர்க்க வேண்டும் என்று நினைப்பதைக் காட்டிலும் திடமான மனத்துடன் அவற்றை எதிர்கொள்வதே சிறப்பு,” என்று கூறினார்.

எந்தச் செயலிலும் ஆக்ககரமாக ஈடுபடுவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

சொத்துச் சந்தைத் துறையைப் பொறுத்தவரை வானமே எல்லை என்பது டாலசின் அசைக்க முடியாத நம்பிக்கை.

தனக்கு மிகப் பெரிய இலக்குகள் இல்லையென்றாலும் தொடர்ந்து தன் பணியின் மூலம் பலரை நல்லமுறையில் ஊக்குவிக்கவும் தன்னைப் போன்றே மற்றவர்களும் வெற்றிபெற வழி வகுக்கவும் முனைந்துள்ளார்.

படம்: டாலஸ் ஹசான்

மின்மினி CLASSIFIED
• Fast • Reliable • Effective

352 வேலை

தேவை
மினிமார்ட்டில் பணிபுரிய தேவை.
* விற்பனை உதவியாளர் (Sales Assistant)
* காசாளர் (Cashier)
* சமையல்காரர் (Cook)
* Drinks Master
தொடர்புக்கு
9817 6021
9380 8052

உடனே தேவை
கிளாஸ் 3 தனிப்பட்ட வாகன ஓட்டுநர்
CLASS 3 PERSONAL DRIVER
* குறைந்தது 3 வருட அனுபவம்
* கிழக்குப் பகுதி
* 5 நாட்கள் வேலை
விண்ணப்பத்தை அனுப்பவும் அல்லது திங்கள் – வெள்ளி அழைக்கவும்.
upt@uptron.com.sg
6334 4485

355 தொழில்
355 தொழில்

STAR EXPRESS CARGO PTE. LTD.
STAR CARGO
DOOR TO DOOR SERVICE IN INDIA

Air Cargo — விமானம் மூலம்
1-5 kgs ........ $15 per kg
6-9 kgs ........ $12 per kg
+10 kgs ........ $10 per kg
Electricals & Electronics ........ $15 per kg

Sea Cargo — கப்பல் மூலம்
10-50 kgs ........ $4 per kg
51-100 kgs ........ $3.5 per kg
+100 kgs ........ $3 per kg
Electricals & Electronics ........ $5 Per kg

16, Cuff Road, Singapore 209727
Tel: 6292 5200 / 8712 0130 / 8652 2442
FREE PICK UP!!! FREE PACKING!!!
குறைந்த விலையில் நிறைந்த சேவை!
*T&C Apply